

# மனமாற்றமும் பாவமன்னிப்பும்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** ஏசா 61:10; ஓசியா 6; அப் 3:18,19; யாத் 34:1–10; ரோமர் 6:23; மத் 22:1–14.

**மனன வசனம்:** நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். 1யோவான் 1:9.

மேகஸ்தம்பம் மேலே இருக்க, இஸ்ரவேலர்கள் சமவெளியில் கூடாரமிட்டிருந்தார்கள். வாக்குத்தத்த தேசம் இன்னும் வெகுதொலைவில் இருப்பதுபோலத் தெரிந்தது. பல நாட்களுக்குமுன் மலையின் மேல்பகுதியை மூடியிருந்த காரிருளுக்குள்ளாக மோசே ஏறிச்சென்றிருந்தார். தங்கள் தலைவர் பசியால் இல்லாவிட்டாலும்கூட, மலை முகட்டில் எரிந்துகொண்டிருந்த பட்சிக்கிற அக்கினியால் மரித்திருப்பாரென நினைத்தார்கள். அந்தக் கலப்பு ஜாதியினர், அதாவது இஸ்ரவேலர்களும் அவர்களுடன் எகிப்திலிருந்து புறப்பட்டவர்களும், பொறுமை இழந்தார்கள், பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்குப் புறப்படத் தயாரானார்கள். ஒரு சில நாட்களுக்குமுன் தேவனுடன் பரிசுத்தமான ஓர் உடன்படிக்கையைச் செய்திருந்த இதே மக்கள், இப்போது தாங்கள் காணக்கூடிய ஒரு சொரூபத்தை உண்டாக்க விரும்பினார்கள். எனவே, ஆரோனின் கூடாரத்திற்குக் கூட்டமாகச் சென்று, தங்களுக்காக ஒரு சொரூபத்தைச் செய்யும்படி அவரிடம் கேட்டுக்கொண்டார்கள். ஆரோன் தன் பாதுகாப்பை எண்ணிப் பயந்து, அதற்குச் சம்மதித்தார். அந்தச் சோக மான சம்பவத்தை யாத் 32-34இல் வாசிக்கலாம்.

இந்த வாரப் பாடத்தின் கருத்துப்பொருளான மனந்திரும்புதல் மற்றும் மன்னிப்புபற்றி நமக்குப் போதிக்கிற வேதாகமச் சம்பவங்களில் இதுவும் ஒன்று. இந்த வார மனனவசனத்தின் கருத்தை மனதில் வைத்து, ஒவ்வொரு நாள் பாடத்தையும் ஆராயவேண்டும். ஆம், நாம் பாவம் செய்கிறோம், ஆனால் இயேசுவின் சிலுவை மரணத்திற்காக ஸ்தோத்திரம், ஏனெனில் உண்மையாகப் பாவ அறிக்கை செய்து, மனந்திரும்புகிற பாவிக்கு மன்னிப்பு இருக்கிறது.

*2026, ஜூன் 6 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# வாழ்க்கையின் பரபரப்பு

ஓய்வுநாளுக்கு முன்னதாகச் செய்யவேண்டிய வேலைகள் அதிகம் இருந்தன, அதற்காக ஆயத்தம்பண்ணுவது முக்கியம் என்று அறிந்திருந்தும், அவள் அவசரக்காரியங்களை வேகமாகச் செய்துமுடிக்கவும், சூரியன் மறைந்துவிட்டது. குடும்பமாக உட்கார்ந்து, வெள்ளிக்கிழமை இரவுக்காகச் சமைத்த விசேஷ உணவைச் சேர்ந்து சாப்பிட்டு, குடும்பமாகச் சேர்ந்து ஆராதனை செய்தனர்.

ஓய்வுநாள் அதிகாலையிலேயே எழுந்தாள், குளியலறை அழுக்காக இருந்தது, சுத்தம் செய்தாள். பிறகு தன் இளைய மகன் படுக்கையை நனைத்திருப்பதைப் பார்த்து, அவனுடைய படுக்கை விரிப்புகளை மற்ற துணிகளுடன் சேர்த்து சலவை இயந்திரத்தில் போட்டாள். மதிய சாப்பாட்டிற்கு வாழைப்பழ ரொட்டி செய்தாள். கணவனுடைய சட்டையை இஸ்திரி செய்தாள், குப்பைகளை எடுத்துப்போட்டாள்.

அப்போதுதான் அவளுக்கு அந்த உண்மை உறைத்தது. 'இது ஓய்வுநாள் - மற்ற எல்லா நாட்களையும்விட நான் அதிகமாக நேசிக்கும் நாள்! இந்த விஷயங்கள் என் கவனத்தைத் திசைதிருப்ப அனுமதித்துக் கொண்டிருக்கிறேனே' என்று யோசித்தாள்.

ஒரு நிமிடம், அவள் மனம் தன் செயல்களை நியாயப்படுத்தத் தொடங்கியது - இவை அனைத்தும் செய்யப்பட வேண்டிய வேலைகள்தான் என்று நினைத்தாள். ஆனால், அவை உண்மையில் அவசியமானவையா? 'பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்த' மார்த்தாளைப்போல தானும் நடந்து கொள்வதை உணர்ந்தாள். லூக் 10:40. அப்போது இயேசுவின் வார்த்தைகள் அவள் மனதில் எதிரொலித்தன: 'நீ அநேக காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்' லூக் 10:41,42. இயேசுவின்மீதான ஆழமான அன்பால், அவரது பாதத்தில் அமருவதுதான் நல்ல பங்கு.

அவள் தேவனை நேசித்தாள், ஆனாலும் தங்களுக்கிடையிலான உறவை வலுப்படுத்த அவர் ஓய்வுநாளை ஒரு நேரப்பரிசாக வழங்கியிருப்பதை எளிதில் மறந்துவிட்டாள். சமையலறையில் நின்றுகொண்டிருந்தபோது, அவளது கண்களிலிருந்து கண்ணீர் மெல்ல வழிந்தது.

இந்த உதாரணத்தின் நோக்கம், ஓய்வுநாளில் நாம் என்ன செய்யவேண்டும் அல்லது செய்யக்கூடாது என்று சுட்டிக்காட்டுவது அல்ல; மாறாக, தேவனோடுள்ள நமது உறவைப் பலவீனப்படுத்தும் அல்லது சிதைக்கும் விஷயங்களில் கவனமாக இருப்பது எவ்வளவு முக்கியம் என்பதை நினைவூட்டுவதே ஆகும். நம் இருதயம் பாவம் மற்றும் பிரிவின் வலியை உணரும்போது, நாம் அவரை நோக்கிக் கூப்பிடுகிறோம், அவர் நமக்கு மிக அருகில் இருக்கிறார். சங் 53:2. இரத்தம்படிந்த தம் கரங்களில் வெண்வஸ்திரத்தைப் பிடித்திருக்கிறார். நாம் மனந்திரும்புதலுடன் விடும் கண்ணீரைக் கண்டு, நம் அழுக்கான வஸ்திரங்களை வாங்கிக் கொள்கிறார். பிறகு தம்முடைய சுத்தமான நீதியின் வஸ்திரத்தை நம்மைச் சுற்றிலும் உடுத்திவிடுகிறார். அவரது பரிசுத்தம் அறிக்கைசெய்யப்பட்ட நம் பாவத்தை முற்றிலுமாக, முழுவதுமாக மூடுகிறது. நாம் அவரது இரத்தத்தில் நம் வஸ்திரத்தைக் கழுவ முடியும். வெளி 7:14.

கிறிஸ்து தம் நீதியை நமக்குக் கொடுக்கிறார் என்கிற முக்கியச் சத்தியத்தை ஏசா 64:6; சக 3:4; ஏசா 61:10 ஆகிய வசனங்கள் எவ்வாறு வெளிப்படுத்துகின்றன? இந்த வசனங்களில் தேவன் நமக்கு வாக்களித்திருப்பதை நாம் ஏன் உறுதியாகப் பற்றிக்கொள்ளவேண்டும்?

# ஆவியானவரின் தூண்டுதல்கள்

தன் மனைவியிடம் அதிகம் பேசுவது கிடையாது, தான் செய்தது தவறு என்று அவருக்குத் தெரிந்தது. அவர் அன்பில்லாமலும், கடுமையாகவும் நடந்திருந்தார்; மேலும் தானே வருந்துமளவிற்குச் சில விஷயங்களையும் சொல்லியிருந்தார். ஆனாலும், உடனடியாக அவருக்குள், 'இதற்கு அவள் கொஞ்சம்கூட, தகுதி இல்லாமலா இருக்கிறாள்?' என்கிற எண்ணமும் எழுந்தது.

இத்தகையச் சிந்தனை ஓட்டம் உங்களுக்குப் பரிச்சயமானதா? ஒரு செயலுக்காக வருந்துவதிலிருந்து, திடீரென நமது எண்ணங்களையும் செயல்களையும் நியாயப்படுத்த மாறுவது மிகவும் எளிது. நாம் தவறு செய்திருக்கும்போது 'என்னை மன்னித்துவிடு' என்று சொல்வது எளிதானது அல்ல, இருப்பினும் ஓர் உறவை மீண்டும் கட்டியெழுப்ப அல்லது வலுப்படுத்த இது மிகவும் அவசியம்.

தேவனுக்கும் நமக்கும் இடையிலான உறவிலும் இதுவே உண்மை. நாம் செய்யும் பாவங்களைப்பற்றிச் சிந்திக்கும்படி பரிசுத்த ஆவியானவர் அடிக்கடி நம் மனதைத் தூண்டுகிறார். இந்தத் தூண்டுதல்களால் நம் இருதயம் நெகிழ்கிறது, ஆனால் அதற்கான காரணங்களை நியாயப்படுத்தும்போது, அந்த மெல்லிய, அமர்ந்த சத்தத்தை புறக்கணித்துவிடுகிறோம். பரிசுத்த ஆவியானவருடைய வேலைகளில் ஒன்று 'பாவத்தைக் குறித்து உலகத்தை உணர்த்துவதாகும்'. யோவான் 16:8. தேவனோடு உள்ள நம் அனுபவத்திற்குள் நுழைகிற இடைவெளியைச் சரிசெய்வதற்கு இத்தகைய உணர்த்துதல்கள் அவசியமாக இருப்பதால், இது தேவன் தருகிற எவ்வளவு அருமையான ஈவு. லூக் 11:13.

**ஓசியா 6இல், மனந்திரும்புமாறு அழைக்கும்போது தேவன் தம்மைப்பற்றி விவரிக்கிறார்; அதில் உங்கள் கவனத்தைக் கவர்ந்தது எது?**

நம்மை மீண்டும் செடியுடன் ஒட்டவைக்க பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்கிறார். யோவான் 15:4. 'நம் தீய செயல்கள் நமக்கு விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்துவதால்தான் நாம் பெரும்பாலும் வருந்துகிறோம்; ஆனால் இது மனந்திரும்புதல் கிடையாது. பாவத்திற்காக மெய்யாக வருந்துவது பரிசுத்த ஆவியானவருடைய கிரியையால் உண்டாவது. இரட்சகரை அலட்சியப்படுத்தி, துக்கப்படுத்திய இதயத்தின் நன்றியற்ற தன்மையை பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்துகிறார்; மேலும் நாம் மனஸ்தாபத்துடன் சிலுவையின் அண்டைக்கு வரும்படி செய்கிறார். ஒவ்வொரு பாவத்தினாலும் இயேசு மீண்டும் காயப்படுகிறார்; ... அவருக்கு வேதனையைத் தந்த பாவங்களுக்காக நாம் துக்கப்படுகிறோம். இத்தகைய துக்கம் பாவத்தை முழுமையாகக் கைவிடுவதற்கு வழிவகுக்கும்.'

நாமே விரும்பி, விருப்பத்தோடு செய்கிற பாவங்கள் நமக்கும் தேவனுக்கும் தடையாக நிற்பதால், அவருடன் உறவில் நாம் வளரமுடியாது. நாம் அனைவரும் தேவ மகிமையற்றவர்களானோம்; ஆனால் பரிசுத்த ஆவியானவர் நம்முடைய பாவங்களை நம் நினைவுக்குக் கொண்டுவரும்போது, நாம் அவற்றிற்காக மனந்திரும்ப முடியும், மனந்திரும்பவும் வேண்டும்.

---

**கடைசியாக நீங்கள் எப்போது உங்களைக் கண்டிக்கக்கூடிய அல்லது மனந்திரும்புதலுக்கான அழைப்பைக் கேட்டீர்கள்? அதற்கு நீங்கள் எப்படிப் பதிலளித்தீர்கள்? தேவன் உங்கள் இருதயத்தை மென்மையாக்கவும், இந்த வாரத்தில் அவரது வார்த்தையிலுள்ள அவரது சத்தத்திற்கு உங்கள் செவிகளைத் திறக்கவும் உதவும்படி அவரிடம் கேட்டு, ஜெபிப்பதற்கு நேரம் செலவிடுங்கள்.**

# மெய்யான மனமாற்றம்

சமயச்சார்பற்ற இந்த உலகம் தேவனுடைய ராஜ்யத்தின் நியதிகளுக்கு முற்றிலும் மாறாக, தற்சார்பு, சிற்றின்பம், மற்றும் சுய விளம்பரம் போன்ற கருத்துக்களை நம்மீது திணிக்கிறது. வேதாகமத்தில், இயேசுவும் யோவானும் பேசின முதல் வார்த்தைகள் ஒன்றுபோல உள்ளன. 'மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது' என்று யோவான் சொன்னார். மத் 3:1,2. 'காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்' என்று இயேசு சொன்னார். மாற்கு 1:14,15; லூக் 24:46,47. கேட்டுக்கொண்டிருந்தவர்களிடம், பரலோகம் ராஜ்யம் சமீபித்திருக்கிறது, அதனால் மனந்திரும்புங்கள் என்று யோவானும் இயேசுவும் பிரசங்கித்தார்கள். இதே செய்தி இன்று நமக்கும் பொருந்தக்கூடுமா?

**ஆவிக்குரிய வளர்ச்சியின் செயல்பாட்டில் மனந்திரும்புதல் ஏன் முக்கியமானது? அப் 3:18, 19. 'இளைப்பாறுதலின்' காலம் என்றால் என்ன?**

தேவனுடைய தயவும் நீடிய சாந்தமும் நம்மை மனந்திரும்புதலுக்கு வழிநடத்துகிறது. ரோமர் 2:4. மனந்திரும்புதலில் இரண்டு படிகள் உண்டு: 1) நம் பாவங்களுக்காக உண்மையாகவே வேதனையடைந்து, வருந்துதல்; 2) பாவத்தை விட்டுவிட உண்மையாகவே தீர்மானித்தல். வேதாகமத்தில், மனந்திரும்புதல் எப்போதுமே பாவமன்னிப்புடன் சம்பந்தப்பட்டே வருகிறது. நாம் மெய்யாகவே மனந்திரும்பும்போது, தேவன் மன்னிக்கிறார். அவ்வளவுதான். 1யோவான் 1:9; வெளி 319. 'தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்' 2பேதுரு 3:9. இரண்டாம் வருகைக்காக நம் ஆத்துமாக்களை ஆயத்தப்படுத்தும்போது, நாம் தேவனோடு அனைத்தையும் சரிசெய்ய தேவன் கால அவகாசம் கொடுக்கிறார்.

நாம் மனந்திரும்பும்போது, அவரது கிருபை நம் வாழ்கையில் அற்புதம் செய்யும்படிக்கே இயேசு பாடுபட்டு, மரித்து, உயிரோடு எழுந்தார். நாம் இருக்கிற நிலையே நல்ல நிலைதான் என்று இந்த உலகம் சொல்கிறது; ஆனால் மனந்திரும்புதலோடும் விசுவாசத்தோடும் அவரிடம் திரும்பவேண்டும் என்று தேவன் சொல்கிறார். அப் 20:21. நாம் அவரைக்குறித்துச் சாட்சியிடும்படிக்கு அவருடைய சாயலுக்கு ஒத்ததாக நம் குணங்கள் மாறுவதற்கு நம்மைக் கிளைகழிக்கவும், அற்புதமாக வடிவமைக்கவும் முற்றிலும் அவரது கரங்களில் நம்மை ஒப்படைக்கவேண்டும். யோவான் 15:2,8. அப்போது நம் மனந்திரும்புதலுக்கு ஏற்றபடி நாம் வளர்ந்து, கனிகொடுக்கிறோம். மத் 3:8.

'சீர்திருத்தத்தை உண்டாக்காத மனமாற்றம் எதுவும் மெய்யானதல்ல. அறிக்கைசெய்து, விட்டுவிடாத பாவத்தை மூடுவதற்கான ஒரு மூடுதிரை கிறிஸ்துவின் நீதியல்ல; அது குணத்தை மாற்றி, நடத்தையைக் கட்டுப்படுத்துகிற ஒரு வாழ்க்கை நியதி'

---

**மனந்திரும்புதல் ஜீவனுக்கு வழிநடத்துகிறது. அப் 11:18. அது, தேவனோடு உறவில் வளருவதற்கு ஒரு முக்கிய அங்கம். உங்களை தேவனிடம் ஒப்படைத்தல், மனந்திரும்புதல், தேவன் உங்களைச் சீர்ப்படுத்த அனுமதித்தல் ஆகிய இந்தச் செயல்பாடுகளில், எந்த நிலை உங்களுக்கு மிகவும் சவாலானதாக இருக்கிறது?**

# போதுமான கிருபை

நாம் பாவத்தின் பாரத்தை உணர்ந்து, பரிசுத்த ஆவியானவர் நம்மைச் சிலுவையண்டைக்கு வழிநடத்த நாம் அனுமதிக்கும்போது, 'கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்' என்பதை உணர்ந்து, நாம் தேவனிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும். சங் 103:8. தேவன் தெரிந்துகொண்ட தேசத்தார் அவரைத் துக்கப்படுத்தியபிறகு இதே வசனத்தை தேவன் சொன்னார். யாத் 34:6.

**யாத் 34:1-10இல் உள்ள முக்கிய உண்மை என்ன?**

---

---

கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர் என்கிற உண்மைதான், தேவனோடு நமக்குள்ள உறவு மீண்டும் சீரடையும்படிக்கு, இயேசு சிலுவையில் மரித்ததற்கான காரணமாக இருக்கிறது.

நாம் நம்முடைய பாவத்தை ஒப்புக்கொண்டு, அறிக்கைசெய்ய முன்வரும்போது; அதாவது, ஆண்டவரே, இதோ நான் மீண்டும் வந்துவிட்டேன்... 'பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்!' என்று கதறும்போது , நாம் அவரை அழைப்பதற்கு முன்பே பரிசுத்த ஆவியின்மூலமாக நமக்காகவும், நமக்குள்ளும் கிரியை செய்து வருகிற இயேசு, நம்முடைய பாரத்தைக் கண்டு, அதை நம்மிடமிருந்து நீக்குகிறார். லூக்கா 18:13. நம் பாரங்கள் சிலுவையில் ஏற்றப்பட்டன, நாம் இயேசுவிடம் செல்லும்போது அவர் நமக்கு அருகில் இருக்கிறார், நாம் தேடுவதற்கு முன்னரே நல்ல மேய்ப்பன் நம் வாசலருகே நின்று, தட்டுகிறார். வெளி 3:20. நாம் சிலுவையை விட்டுத் தூரமாகச் சென்று, அங்கு நின்று தேவனைப் பார்க்கக்கூடாது. நாம் இயேசுவிடம் ஓடுவோம், நம் பாவங்களையும் பாரங்களையும் கொடுத்து, அவரது நீதியைப் பெறுவோம். சக 3:4.

**பின்வரும் வசனங்களை மெதுவாக வாசியுங்கள். உங்கள்மீது தேவன் வைத்திருக்கிற கிருபைபற்றி அவை சொல்வதை உங்கள் சொந்த வார்த்தைகளில் எழுதுங்கள்:**

*'பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்' ரோமர் 6:23.*

*'மேலும், மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது; அப்படியிருந்தும், பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று. ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது' ரோமர் 5:20,21.*

---

**'நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்' ரோமர் 5:8.**

# மிகவும் விலையுயர்ந்த அங்கி

ஆடம்பரமான உடைகள் செல்வந்தர்களின் செல்வச்செழிப்பை அடையாளப்படுத்துகின்றன. சிலர், 'நான் யார் என்பதை வெளிப்படுத்தவே இப்படி ஆடை அணிகிறேன்' என்று கூறுகிறார்கள். ஆனால், பரலோகத்தில் நம்முடைய உறவுகளைத் தவிர மற்ற அனைத்தும் அழிந்துவிடும். மத்தேயு 6:19-21. நம்முடைய தனிப்பட்ட அடையாளம் இயேசுவோடும், அவருடைய நீதியாகிய பூரணமான வஸ்திரத்தோடும் இணைந்திருக்கவேண்டும்.

**இதை விளக்குவதற்காக இயேசு சொன்ன உவமையை மத் 22:1-14இல் வாசியுங்கள். இந்த உவமையில் நமக்குள்ள செய்திகள் என்ன?**

கலியாண வஸ்திரம் தரிக்காமல் இருந்த மனிதனை இயேசு 'சிநேகிதனே' என்று அழைத்தார்; அவன் பதில் ஏதும் சொல்லாத போதிலும், அவர்களுக்குள் ஓர் உறவு இருந்திருக்கவேண்டும் என்பது தெரிகிறது. அந்த வஸ்திரம்பற்றி அறிந்திருந்தும், அதை அணியத் தீர்மானிக்கவில்லை. இயேசுவின் குணம் பூரணமானது, கறையற்றது, தம் சபை 'சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம்' தரித்திருப்பதற்கும், 'கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல்' இருப்பதற்கும் அதை அருளுகிறார். வெளி 19:8; எபே 5:27.

வெண்வஸ்திரம் 'கிறிஸ்துவின் நீதியாக, பழுதற்ற அவருடைய சொந்தக் குணமாக இருக்கிறது, அது விசுவாசத்தால் அவரைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கிற அனைவருக்கும் அருளப்படுகிறது'[1].

பாவம் செய்வதற்குமுன் ஆதாமும் ஏவாளும் மெல்லிய ஒளியை வெண் வஸ்திரமாக உடுத்தியிருந்தார்கள்; பாவம் செய்தபிறகு தாங்கள் நிர்வாணிகளாக இருந்ததை உணர்ந்தார்கள். ஆதி 3:7. பிறகு தேவன், அவர்களது அத்தியிலை உடைக்குப் பதிலாக, மிருகத்தோல்களால் ஆன உடையைக் கொடுத்தார். இடப்பட்ட ஒரு பலியிலிருந்து அவர்களது ஆடை செய்யப்பட்டது. அதேபோல, இயேசுவின் நீதியின் வஸ்திரத்தை ஏற்றுக்கொள்வதன்மூலம், அவரது பலியை ஏற்றுக்கொள்கிறோம். 'நிர்வாணமாகவும் அவமானமாகவும் உணர்ந்ததால், பரலோக வஸ்திரங்களுக்குப் பதிலாக அத்தி இலைகளைத் தைத்து தங்களை மூட முயன்றார்கள்... இழந்துபோன பாவக்கறைபடியாத மேலங்கிக்கு மாற்றாக மனிதன் எதையும் உருவாக்கிவிட முடியாது. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில் கிறிஸ்துவோடும் தூதர்களோடும் அமருபவர்கள், அத்தி இலைகளால் ஆன ஆடையையோ இந்த உலக மக்களின் சாதாரண உடையையோ அணியமுடியாது. கிறிஸ்து வழங்கிய அந்த மேலங்கிமட்டுமே தேவனுடைய பிரசன்னத்தில் நிற்பதற்குத் தகுதியுள்ளவர்களாக நம்மை மாற்றும். இந்த அங்கியை, கிறிஸ்துவின் சொந்த நீதியாகிய வஸ்திரத்தை, மனந்திரும்பி விசுவாசிக்கும் ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் அவர் அணிவிப்பார்'[2]

[1] Ellen G. White, Christ's Object Lessons, p. 310.

[2] Ellen G. White, Christ's Object Lessons, p. 311.

---

**தியானியுங்கள்: நாம் தினமும் கிறிஸ்துவின் நீதியாகிய வஸ்திரத்தால் உடுத்தப்படத் தீர்மானிக்க வேண்டும். இதன் அர்த்தம் என்ன? இதை நாம் எவ்வாறு செய்யலாம்?**

# மேலும் படிக்க:

'நமது ஆவிக்குரிய நிலையை விவரிப்பதற்கு வேதாகமம் விவசாயம் சார்ந்த உருவகங்களைப் பயன்படுத்துகிறது. இந்த வாரம் நாம் கலந்துரையாடிய விஷயங்களைச் சுருக்கமாகக் கூறும் ஒரு உதாரணம் ஓசியா 10:12: 'நீங்கள் நீதிக்கென்று விதைவிதையுங்கள்; தயவுக்கொத்ததாய் அறுப்பு அறுங்கள்; உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள்; கர்த்தர் வந்து உங்கள்மேல் நீதியை வருஷிக்கப்பண்ணுமட்டும், அவரைத் தேடக் காலமாயிருக்கிறது'.

நாம் விதைக்கிறோம், அறுக்கிறோம், கடினமான நிலத்தைப் பண்படுத்துகிறோம், தேவன் நம்மிடம் நெருங்கி வரும்படி அவரைத் தேடுகிறோம். நம் இருதயத்தின் கடினமான நிலம், அதன்மேல் மழை (பரிசுத்த ஆவி) பொழிவதற்கு ஏற்றவாறு பண்படுத்தப்பட்டு ஆயத்தமாக இருக்கவேண்டும். நிலத்தை ஆயத்தம்செய்வதற்கான விருப்பத்தை தேவன் நமக்குத் தரமுடியும்; ஆனால், இறுதியில் அவரோடான உறவு ஒரு கூட்டுமுயற்சி உறவாகும். பிலி 2:12,13. நாம் அவரை நோக்கி நம்முடைய பார்வையைத் திருப்பி, அவரை நோக்கிக் கரங்களை நீட்டி, அவரை உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும். அதன் பிறகு, மீதமுள்ளவற்றைச் செய்வதற்கு அவர் நமக்குள் கிரியை செய்கிறார்.

தேவனைப்பற்றிக்கொள்வதின் அர்த்தம்பற்றி அறிவதற்கு மிகப்பெரிய ஓர் உதாரணம் இந்த வசனங்களில் உள்ளது: 'பாகால்பேயோரின் நிமித்தம் கர்த்தர் செய்ததை உங்கள் கண்கள் கண்டிருக்கிறது; பாகால்பேயோரைப் பின்பற்றின மனிதரையெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இராதபடிக்கு அழித்துப்போட்டார். ஆனாலும் உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பற்றிக்கொண்ட நீங்களெல்லாரும் இந்நாள்வரைக்கும் உயிரோடிருக்கிறீர்கள்' உபா 4:3,4.

---

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *'எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்' மத் 6:13. இயேசு குறிப்பாகத் தம்முடைய சீஷர்களுக்கு இந்த விதமாக ஜெபிக்கும்படி போதித்தார். ஆனால், நம்முடைய அன்றாட ஜெபங்களில் இந்தச் சிந்தனையைக் கடைப்பிடிக்கிறோமா? சோதனைக்கும் பாவத்திற்கும் எதிரான பாதுகாப்பிற்காக நீங்கள் எவ்வளவு தூரம் தவறாமல் ஜெபிக்கிறீர்கள்?*
2. *கிறிஸ்துவின் நீதி என்னும் விலையேறப்பெற்ற வஸ்திரத்தைப்பற்றி, கிறிஸ்தவர் அல்லாத ஒருவருக்கோ, புதிதான ஒரு விசுவாசிக்கோ எவ்வாறு விளக்குவீர்கள்?*
3. *கிறிஸ்துவின் நீதி என்னும் வஸ்திரத்திற்கும், மனந்திரும்பும் பாவியை, தேவன் மன்னித்து, சுத்திகரிப்பதைச் சுட்டிக்காட்டின ஆசரிப்புக்கூடாரத்தின் செய்திக்கும் இடையிலுள்ள தொடர்பு என்ன?*

**பாடச்சுருக்கம்:** பரிசுத்த ஆவியானவருடைய தூண்டுதல்களுக்கு இணங்கி, நம் பாவங்களை அடையாளங் காண்பதும், மனந்திரும்புதலோடு சுயத்தை ஒப்படைப்பதும் தேவனோடு உயிரோட்டமான உறவைப் பாதுகாக்க முக்கியம். நாம் முற்றிலும் மன்னிக்கப்பட்டதையும், இயேசுவின் நீதியாகிய அங்கியால் மூடப்பட்டிருப்பதையும் அறிவதே, மிக உன்னதமான மறுரூபமாக்கப்படுகிற அனுபவம். அப்போது நம் பாவப்பாரம் நீங்கும், அதுமட்டுல்ல, நாம் தேவனிடம் நெருங்கிச் செல்லும்போது, தேவ அன்பு நம்மைச் சுற்றிலும் காணப்படுவம். இது நம்மைதேவனுடன்கட்டுகிறது, ஆவிக்குரியரீதியாகநம்மைப்பெலப்படுத்துகிறது, நமது ஒவ்வொரு அணுவாலும் அவரை நேசிக்கும்படி நம்மைத் தூண்டுகிறது.

# சமையல் பானையருகே பேசிய சத்தம்

சாம்பியாவைச் சேர்ந்த 41 வயது தாயான மிரியம் உடல்நலமில்லாமல் இருந்தார். அவரது தலை பயங்கரமாக வலித்தது. உடல் முழுவதும் வேதனையாக இருந்தது. அவரது மனதை கடும் சோகம் ஆட்கொண்டிருந்தது. பாரமான இதயத்தோடு, லிவிங்ஸ்டனில் ஒரு வாரம் நடைபெறவிருந்த சுவிசேஷக் கூட்டத்தின் முதல் நாள் இரவு நிகழ்ச்சிக்குச் சென்றார். அங்கே மஜோரி என்கிற செவ்ந்த்–டே அட்வென்டிஸ்ட் பெண்ணுடன் அவருக்கு நட்பு ஏற்பட்டது. மிரியம் தனது இதயத்தின் வலியை அவரிடம் கொட்டி, தனக்காக ஜெபிக்கும்படி கேட்டார். மஜோரியும் அவருக்காக ஜெபித்தார்.

அதன்பிறகு அசாதாரணமான ஒரு சம்பவம் நடந்தது. அடுத்த நாள் காலை 11 மணியளவில், மிரியம் தனது வீட்டிற்கு வெளியே அடுப்பில் ஒரு பானையில் சோளக் கஞ்சியைச் காய்ச்சிக்கொண்டிருந்தார். சாம்பியாவில் மின்சாரப் பற்றாக்குறை நிலவியதால், பல வீடுகளில் மின்சாரம் இல்லை, எனவே, பலரைப்போலவே அவரும் வெளியிலேயே சமைத்து வந்தார். அவர் கிளறிக்கொண்டிருந்தபோது, ஒரு சத்தம் அவருக்குள் ஒலிப்பதை உணர்ந்தார்: ‘இப்போதே சென்று வேதாகமத்தை வாசி. உனது பானையை அப்படியே விட்டுவிட்டுச் சென்று வேதாகமத்தை வாசி’.

வேதாகமத்தில் எதை வாசிப்பது என்று மிரியமிற்குத் தெரியவில்லை. வீட்டிற்குள் சென்று, வேதாகமத்தைத் திறந்து கண்ணில்பட்ட முதல் அதிகாரத்தை வாசித்தார். ஆச்சரியமாக இருந்தது. தேவன் நேரடியாகத் தன்னிடம் பேசுவதுபோலவே உணர்ந்தார்.

அவர் வேதாகமத்தை மூடிவிட்டு, வெளியே சென்று கஞ்சியைச் சமைத்து முடித்தார். பின்னர் மீண்டும் உள்ளே வந்து மற்றொரு அதிகாரத்தை வாசித்தார். அப்போது தேவன் அவரிடம், “நான் இன்னும் உன்னை நேசிக்கிறேன் என்பது உனக்குத் தெரியுமா? நான் விரும்பும்படி நீ வாழவேண்டும்” என்று சொல்வதுபோல இருந்தது. அவர் இதயத்தில் மகிழ்ச்சி பொங்கியது. அவரது உடல் வலி மறைந்தது, தலைவலியும் நின்றது. அவர் முழங்காலிட்டு, “தேவனே, என்னை மன்னியும்” என்று வேண்டினார். மிரியம் அன்று மாலை மீண்டும் அந்தச் சுவிசேஷக் கூட்டத்திற்குச் சென்றார். அவர் மஜோரியிடம் ஓடிச் சென்று நடந்தவற்றைச் சொன்னார். காலை 11 மணிக்கு வேதாகமத்தை வாசிக்குமாறு மிரியம் ஒரு சத்தத்தைக் கேட்டதை அறிந்தபோது, மஜோரியின் கண்களில் கண்ணீர் மல்கியது. ஏனென்றால், அதே சரியான நேரத்தில் மஜோரி தனது வீட்டில் மிரியத்திற்காக ஜெபிக்கும்படி தூண்டப்பட்டிருந்தார். “ஒவ்வொரு நாளும் வேதாகமத்தை வாசிக்க நேரம் ஒதுக்குங்கள், எப்போதும் ஜெபிக்க மறக்காதீர்கள். வேதவாசிப்பும் ஜெபமும்தான் எல்லாவற்றிற்கும் திறவுகோல்” என்று மஜோரி கூறினார்.

மிரியம் தொடர்ந்து வேதாகமத்தை வாசிக்கவும் ஜெபிக்கவும் தொடங்கி பல மாதங்கள் கடந்துவிட்டன. இப்போது அவரது தலைவலி நின்றுவிட்டது, உடல் வலியும் இல்லை. ஒரு காலத்தில் அவரது இதயத்தை நிரப்பியிருந்த இருண்ட சோகத்திற்குப் பதிலாக, இப்போது சூரியனைப் போன்ற பிரகாசமான மகிழ்ச்சியும், தேவனுக்கா வாழவேண்டும் என்ற தீவிர விருப்பமும் உள்ளது. ‘வேதாகமம் எனக்கு ஊக்கமளிக்கிறது, தேவன் வேதாகமத்தின் மூலமாகச் செயல்படுகிறார். பிசாசு குழப்பத்தைக் கொண்டுவர முயன்றால், நான் வேதாகம வாக்குறுதிகளைக் கூறி ஜெபிப்பேன்”.

